16.04.2025

O.S.No.377 of 2022

PW1 திரு.தமிழ்செல்வம் (பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை):-

சாட்சி வா.த.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

நான் ராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றிருக்கின்றேன். 2011 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றேன். அதன் பிறகு நான் Bank of Indiaவில் செக்யூரிட்டி ஏ.எஸ்.ஓவாக பணிசெய்கின்றேன். நான் ஏ.எஸ்.ஓவாக 7 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகின்றேன். ஏ.எஸ்.ஓ என்றால் அசிஸ்டன்ட் செக்யூரிட்டி ஆபீசர். நான் ஆர்மியில் ஓய்வு பெற்று தற்பொழுது பணி புரிந்து வருவதாக என்னுடைய வழக்குரையிலும் என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியிருக்கின்றேனா என்றால் சொல்லியிருக்கின்றேன். என்னிடம் காண்பிக்கப்படும் வழக்குரையில் இந்த விவரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி ஜெயகுமாரையும் அவரின் பவர் ஆப் அட்டர்னி சுசிகரனையும் எப்படி தெரியும் என்றால் நான் வீடு வாங்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தேன் அப்பொழுது சுசிகரன் எனக்கு பழக்கம். சுசிகரன் பெண். அவரது கணவர் தான் ஜெயக்குமார். சுசிகரன் தனது கணவர் வெளிநாட்டில் இருப்பதாகவும் எம்பஸ்சி மூலம் பவர் வாங்கி கொடுப்பதாகவும் அடமானம் பதிவு செய்து கொடுப்பதாகவும் கூறினார். தாவா சொத்தின் உரிமையாளர் ஜெயக்குமாரை நான் பார்த்ததே இல்லை. முதல் அடமானம் செய்யும் பொழுது தான் சுசிகரனை தெரியும். அந்த அடமான தேதி டிசம்பர் மாதம் 2020ல் அடமானம் செய்யப்பட்டது தேதி எனக்கு ஞாபகம் இல்லை. இந்த அடமானம் தான் முதல் அடமானம். முதல் அடமானம் எழுதிக்கொடுக்கும் பொழுது தரகர் வெங்கடேசன் உடன் வந்தார். முதல் அடமானத்தை சுசிகரன் எழுதிக்கொடுத்தார். சாட்சியாக வெங்கடேசனை அழைத்து வந்தார். அந்த தேதியில் ஜெயக்குமார் போன் மூலமாக என்னைத் தொடர்பு கொண்டு என் மனைவி அடமானம் எழுதிக்கொடுப்பார் நான் எம்பஎஸ்சி மூலமாக பவர் அனுப்புகிறேன் என்று

கூறினார். அந்த பவர் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கின்றேன். அந்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. முதல் அடமானத்தின் பொழுது ரூ.30 லட்சம் கடனாக கொடுத்தேன். ரூ.30 லட்சம் பணத்தை என்ன விதமாகக் கொடுத்தேன் என்றால் எல்லாமே வங்கி பரிவர்த்தனை, செக்கும் கொடுத்தேன். எனக்கு State Bank of India, Bank of India and Canara Bank ஆகிய மூன்று வங்கியிலும் வங்கிக் கணக்கு இருக்கின்றது. மேற்படி வங்கி கணக்கில் இருந்து தான் ஆன்லைன் RTGS மூலமாக பணம் அனுப்பினேன். கடைசியாக இந்தியன் ஓவர்ஸிஸ் வங்கி மூலமாக அனுப்பி வைத்தேன். இந்த பரிவர்த்தனை எல்லாம் பதிவு செய்து கொடுத்தபொழுது நடந்ததா என்றால் ஆமாம் பதிவு செய்த பொழுது நடந்தது. ஒரு ரூ.5 லட்சம் குறைந்ததால் செக் கொடுத்திருந்தேன். 15 நாட்களுக்குள் இந்த பணத்தை வங்கி மூலமாக அனுப்பி வைத்தேன். இந்த பரிவர்த்தனைகளை காட்டக்கூடிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கின்றேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. முதல் அடமானத்தில் கொடுக்கப்பட்ட கடன் தொகைக்கு வருடம் ஒன்றிற்கு 24 சதவீகித வட்டி போடப்பட்டுள்ளது. முதல் அடமானத்தில் 6 மாத காலத்திற்குள் கடனை திருப்பி கொடுக்கவேண்டும் என்று குறிப்பிப்பட்டிருக்கின்றது. என்னிடம் காண்பிக்கப்படும் வா.த.சா.ஆ.1 முதல் அடமான பத்திரத்தில் 6 மாத காலத்திற்குள் கடனை திருப்பி செலுத்தவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கின்றதா என்றால் குறிப்பிடப்படவில்லை. முதல் அடமானத்திற்கு பிறகு பிரதிவாதி வட்டி எதுவும் கொடுக்கவில்லை. முதல் அடமானம் வைக்கப்பட்ட தேதியில் இருந்து வட்டி எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். முதல் அடமான காலத்திற்கு பின்பு வட்டி கொடுக்காததால் பிரதிவாதிக்கு அறிவிப்பு எதுவும் நான் அனுப்பவில்லை. போன் மூலமாக தொடர்புகொண்டேன். போன் மூலமாக சசிகரனை தொடர்பு கொண்டேன். முதல் அடமானத்தின் படி 6 மாத காலத்திற்குள் பிரதிவாதி வட்டியும் முதலையும் சேர்த்துக்கொடுக்கவேண்டும். நான்

முதல் அடமானத்தில் குறிப்பிட்டிருக்கின்ற வட்டி விகிதம் ரிசர்வ் வங்கி குறிப்பிட்டிருக்கின்ற வட்டி விகிதத்தை விட அதிகம் என்றால் நான் நிலத்தின் பெயரில் கடன் கொடுத்தேன் நிலத்தின் மதிப்பு இரண்டு மடங்கு அதிகரித்துவிட்டது. நான் தமிழ்நாடு கந்துவட்டி தடுப்புச் சட்டத்திற்கு புறம்பாக அரசு நிர்னயம் செய்துள்ள வட்டி விகிதத்திற்கு அதிகமாக வட்டி கோரியிருக்கின்றேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி இந்த வட்டித் தொகைக்கு ஒத்துக்கொண்டார்.

(அறிவார்ந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகின்றது)